# முல்லைத்தீவு முன்னாள் நீதவானுக்கு அச்சுறுத்தல் எதுவும் இருக்கவில்லை!



## அறிக்கை சமர்ப்பித்தது சி.ஐ.டி.

**முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி சரவணராஜாவுக்கு உயிருக்கு எவ்வித அச்சுறுத்தலும் இருக்கவில்லை என்றும் அவர் திடீரென வெளிநாடு சென்றமை முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**செப்டம்பர் 25ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்கு நீதிபதி விடுப்புக் கோரி விண்ணப்பித்தபோது, அதற்கு அனுமதி வழங்கப்பட்டு செப்டம்பர் 24ஆம் திகதி அவர் திடீரென வேறு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார், என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**சரவணராஜாவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்த நிலையில், அது குறித்து விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு தனது அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.**

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 25 வியாழக்கிழமை 12.10.2023 கதிர் 91

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## வடமாகாண நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சி பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உடன் இன்று யாழ்.நகரில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக பென்னி மோர்டௌண்டிற்கு 2➤

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாவினால்தான் நாடு சீரழிந்தது - ஐ.தே.கவின் ஆசு மாரசிங்க



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் தான் நாடு சீரழிந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதியின் காலத்தில் 850 - 900 பில்லியன் 2➤



## புலி அமைப்பின் வாலை மட்டுமே நாங்கள் அழித்திருக்கிறோம்!

### சரத் வீரசேகர எம்.பி. கவலை

தோட்டாக்களினால் பெற்றுக்கொள்ள முடியாது போன தமிழீழத்தை, 13 இன் ஊடாகப் பெற்றுக் கொள்வதே சிலரின் இலக்காகும், என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2➤




## பல்கலைக்கழகங்களில் இன்று அடையாள ஆர்ப்பாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 12

பல்கலைக்கழகப் பணியாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசாங்கத்தின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தீர்வினை வேண்டியும் அடையாள ஆர்ப்பாட்டங்கள் இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்றலிலும் இன்று நண்பகல், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (O1)

## மண்சரிவினால் நெடுஞ்சாலை நடைமுறைகளில் மாற்றம்

மண்சரிவு ஏற்பட்டுள்ள போதிலும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில்ஈடுபடும்பேருந்துகள்வழமை போன்று இயங்குவதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மண் சரிவு காரணமாக பின்னதுவ மற்றும் இமதுவ பகுதிகளுக்கு இடையே வாகனப் போக்குவரத்து தடைபட்டாலும், நெடுஞ்சாலைப் பேருந்துகள் வழமைபோல் இயங்கி வருவதாக சபை அறிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பில் இருந்து செல்லும் பேருந்துகள் மற்றும் மாத்தறையிலிருந்து பயணிக்கும் 2➤

## வெள்ளத்தில் சிக்கிய புலமைப்பரிசில் மாணவன் இன்று காலை சடலமாக மீட்பு!

கண்டி - தெல்தோட்டை - லிட்டில் வெளி பகுதியிலுள்ள ஆற்றிலிருந்து பெருக்கெடுத்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 10 வயது மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை காணாமல்போன மாணவனின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பில் கலந்து கொண்டுவிட்டு அந்த மாணவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சிதைவடைந்த நிலையில் மனிதத் தலை ஒன்று மீட்பு

பமுனுகம பழைய அம்பலம கடற்கரையில் இன்று காலை துண்டிக்கப்பட்ட மனிதத் தலை ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தலை அடையாளம் காண முடியாத அளவுக்குச் சிதைந்துள்ளது என்று பமுனுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மனிதத் தலை தொடர்பில் நீதிவான் விசாரணை நடத்தப்படவுள்ளது என்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## மாத்தறை மாவட்ட புலமைப்பரிசில் பரீட்சார்த்திகளுக்கு விசேட அறிவிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாத்தறை மாணவர்களுக்கு மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இதன்படி, பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் சிரமங்கள் ஏதேனும் இருந்தால், பரீட்சார்த்திகளின் பெற்றோர் மற்றும் கண்காணிப்பாளர்களை ஒக்டோபர் 14 ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கோரியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை மாத்தறையில் உள்ள அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு, 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 0412 234 134 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் - இன்று அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா மோதல்



இந்தியாவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்க அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டு விளையாடிவருகின்றன.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி, 44 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (04)

## மண்சரிவினால் நெடுஞ்சாலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்துகள் வெவேறு சந்ததிகளின் ஊடாக வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பேருந்துகள், இமதுவ நுழைவாயில் வழியாக வெளியேறி, பின்னதுவ நுழைவாயிலிலும், கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை நோக்கிச் செல்லும் பேருந்துகள் பின்னதுவ நுழைவாயிலிலிருந்து வெளியேறி இமதுவ நுழைவாயிலில் இருந்தும் மீண்டும் அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைய முடியும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (04)

## புலி அமைப்பின் வாலை மட்டுமே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்.ரி.ரி.ஈ. அமைப்பை நாம் பெரும்பாலும் அழித்துள்ளோம். ஆனால், நாம் புலி அமைப்பின் வாலை மட்டும்தான் அழித்துள்ளோம். அதன் தலை உள்ளிட்ட ஏனைய பகுதிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இன்னமும் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

தமிழ்ப் பிரிவினைவாதப் புலம் பெயர் அமைப்புக்கள், தங்களின் கனவை இன்னமும் விடவில்லை. தோட்டாக்களினால் பெற்றுக்கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, 13 இன் ஊடாகப் பெற்றுக் கொள்வதே இவர்களின் இலக்காகும். இதனால்தான், நாம் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் இவர்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். அத்தோடு, வடக்கு கிழக்கிலுள்ள பௌத்த புராதன சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

யுத்தத்திற்கு பின்னர் 12,422 புலி உறுப்பினர்களை நாம் புனர்வாழ்வளித்து, சமூக மயமாக்கியுள்ளோம்.

பயங்கரவாதத்தை நாம் கட்டமைப்பு ரீதியாக இல்லாதொழித்தாலும், அவர்களின் ஈழக் கனவு இன்னமும் இருப்பதனால், எமக்கு இன்னமும் அச்சுறுத்தலான சூழல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த நிலையில்தான் மீண்டும், எல்.ரி.ரி.ஈ. அமைப்பு தலைதூக்கி வருவதாக இந்தியாவிலிருந்து எமக்குப் புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இது தொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## முன்னாள் ஜனாதிபதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமானம் நாட்டுக்கு இல்லாமல் போனது.

இதனால்தான் டொலர் தட்டுப்பாடுக்கு நாம் முகம் கொடுத்தோம். நாட்டுக்குத் தேவையான நிதியை பெறுவதற்காக மத்திய வங்கி பணத்தை அச்சிட்டதை யடுத்துத்தான் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது.

தனக்கு நெருக்கமான பெரு வியாபாரிகளுக்கு சலுகை வழக்கும் வகையில்தான் முன்னாள் ஜனாதிபதி 900 பில்லியன் ரூபா வரி வருமானத்தை இல்லாமல் செய்தார். இதனால் ஏற்பட்ட பொருளாதார சிக்கலுக்குத்தான் நாம் இப்போதுவரை முகம் கொடுத்து வருகிறோம்.

இதிலிருந்து மீள்வதற்காக இன்னமும் சிறிய காலம் மக்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியேற்படும்.

ஆனால், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மக்களுக்குத் தேவையான உரிய நிவாரணங்களை வழங்குவார் என நாம் நம்புகிறோம், என அவர் தெரிவித்தார். (04)

## வடமாகாண நிலைமை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் விளக்கமளித்தார். வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ் வைக் கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் தெரிவித்தார். இக்கலந்து ரையாடலில் இலங்கைக்கான பிரித் தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக் கும் கலந்துகொண்டார். (01)

## முல்லைத்தீவு முன்னாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி சரவணராஜா 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நீதவானாக நியமிக்கப்பட்ட அதேநேரம், முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அவருக்குத் தேவையான சகல பாதுகாப்பையும் வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் முகவர் ஒருவர் ஊடாக அவரது பயணத்துக்கான விமானப் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் அமெரிக்காவில் உள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டபோதும் அந்தத் தொலைபேசி எண் தற்போது செயல்படவில்லை எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியில் இருந்து விமானப் பயணச்சீட்டுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஷார்ஜா, நைரோபி, டெல்லி வழியாக ஒக்டோபர் 12 ஆம் திகதி இலங்கை திரும்புவதற்கு டிக்கெட் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஷார்ஜாவை அடுத்து நைரோபிக்குச் செல்வதற்கு நீதவான் விமான டிக்கெட்டை பயன்படுத்தவில்லை என்பது விமான நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீதிபதியின் வெளிநாட்டுப் பயணம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. அவரது ஆவணத்தில் நைரோபியே அவரது இலக்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது. சேவையிலிருந்து அவர் ராஜினாமாச் செய்த பின்னர் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டைப் பயன்படுத்துவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திய இரண்டு அதிகாரிகளும் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக்காக தினமும் நான்கு உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாக முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேலும், நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் கான்ஸ்டபிள் பிரேமன், தனக்குரிய பாதுகாப்புப் போதுமானதாக இல்லை, என நீதிபதி ஒருபோதும் கூறவில்லை என்றும், உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி தம்மிடம் தெரிவித்ததில்லை என்றும் வாக்குமூலம் அளித்திருக்கிறார். முல்லைத்தீவு நீதிமன்றில் கடமையாற்றிவரும் தனக்கு, மரண அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி ஒரு போதும் தெரிவிக்கவில்லை என நீதிமன்றப் பதிவாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, தனது கணவர் நீதிபதி என்ற முறையில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்ததாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்பு இல்லாதது குறித்துத் தன்னிடம் குறிப்பிட்ட அவர், சமீபகாலமாக அவ்வாறான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் எதுவும் கூறவில்லை எனவும் அவரது மனைவி தெரிவித்திருக்கிறார். செப்டம்பர் 23 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் தனது கணவர் வெளியேறியதாகவும், அவர் வெளிநாடு செல்வது தனக்குத் தெரியாது என்றும் நீதிபதியின் மனைவி கூறியுள்ளார்.

நீதிபதி வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தனது காரை விற்றுவிட்டு, செப்டம்பர் 23ஆம் திகதி வெளிநாடு சென்றதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
மாலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்



# பிரம்படிப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல்

கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

1987 ஆம் ஆண்டு இதே மாதம் பதினோராம் பன்னிரண்டாம் திகதிகளில் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 50க்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொடூரமாக இந்திய இராணுவம் கொலை செய்தது.

அந்நாளின் 36 ஆவது நினைவு தினம் நல்லூர் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவுகளால் நினைவு கூரப்பட்டது.

இதன்போது, வீதியோரமாக அமைந்துள்ள நினைவுத் தூபியில் சுடரேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில், சமூகச் செயற்பாட்டாளர் மு.தமிழ்மணி அவர்களால் படுகொலை தொடர்பான நினைவு உரையும் ஆற்றப்பட்டது. (01)

# கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக உப்புல செனவரத்தின இரணைமடுவில் பதவியேற்பு



கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக உப்புல செனவரத்தின இன்றைய தினம் பதவியேற்றுள்ளார்.

பதவியேற்பு நிகழ்வு கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இன்று காலை இடம்பெற்றது.

சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்று, மதத் தலைவர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்ட பின்னர் வைபவ ரீதியாக காலை 10 மணியளவில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இன்றைய பதவியேற்பு நிகழ்வில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

# யாழ் மத்திய கல்லூரியின் உடற்பயிற்சிக் கூடம் திறப்பு



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உடற்பயிற்சிக் கூடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் நேற்று நடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டு, நினைவுக் கல்லும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

கல்லூரி அதிபர் சி.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்வி அமைச்சின் செயலாளர் றணசிங்க, வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் பற்றிக் நிறஞ்சன், கல்வித் துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (01)

# பாதாளக் குழு உறுப்பினர் சுட்டுக்கொலை!

பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தெல்வத்த, மீட்டியகொட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார் .

இவ்வாறு உயிரிழந்துள்ள நபர் 42 வயதுடைய குடும்பஸ்தர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் பதுங்கி இருக்கின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அப்போது, வீட்டில் பதுங்கியிருந்த சந்தேகநபர் துப்பாக்கியால் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை நோக்கிச் சுட்டுள்ளார். தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும்போது சந்தேகநபர் சுடப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர், அண்மையில் காலி, கராகொட பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் தெடிமுணி பாலேந்திரசிங்கவின் கொலைச் சம்பவத்தின் சந்தேகநபர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)



# காஸாவில் ஹமாஸ் படையின் தாக்குதலில் ஐ.நா. ஊழியர்கள், மாணவர்கள் பலியாகினர்




காஸாவில் ஹமாஸ் படையின் தாக்குதலில் ஐக்கிய நாடுகள் சபையின் 11 ஊழியர்களும், ஐக்கிய நாடுகள் சபையின் பராமரிப்பிலுள்ள பாடசாலை மாணவர்கள் 30 பேரும் பலியானதாக ஐக்கிய நாடுகள் சபையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை ஆயிரக்கணக்கான ரொக்கெட்டுகளை சரமாரியாக வீசித் தாக்குதல் நடத்தினர். அத்துடன், இஸ்ரேலுக்குள் நிலம், கடல், வான் வழியாக 22 இடங்களில் ஊடுருவிய சுமார் 1,000 ஹமாஸ் அமைப்பினர், சுமார் 25 கிலோ மீற்றர் வரை உள்ளே நுழைந்து பொதுமக்களையும், ராணுவத்தினரையும் சுட்டுக் கொன்றதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தவிர, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என பலரை ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுவரை இல்லாத அளவுக்கு தங்கள் நாட்டுக்குள் ஹமாஸ் நடத்திய இந்தக் கொடூரத் தாக்குதலுக்குப் பதிலடியாக, கடந்த 5 நாள்களாக காஸா முழுவதும் இஸ்ரேல் ராணுவம் தீவிர வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. மக்கள் மிக நெருக்கமாக வசிக்கும் அந்த மிகச் சிறிய பகுதிக்கு மின்சார விநியோகத்தைத் துண்டித்த இஸ்ரேல் அரசு, உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத வகையில் அந்தப் பகுதியை முற்றுகையிட்டது.

ஏற்கெனவே, இஸ்ரேலின் கடுமையான விமானத் தாக்குதலால் காஸாவின் பல்வேறு பகுதிகள் தரைமட்டமாகி வருகின்றன. மேலும், இந்தத் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சூழலில், ஹமாஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் ஐக்கிய நாடுகள் சபையின் 11 ஊழியர்களும், ஐக்கிய நாடுகள் சபையின் பராமரிப்பிலுள்ள பாடசாலை மாணவர்கள் 30 பேரும் பலியானதாக ஐக்கிய நாடுகள் சபையின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஐ.நா நிவாரண மற்றும் பணி முகமை சேர்ந்த 11 ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காஸாவில் நடத்தப்படும் பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நா. பாடசாலையின் மாணவர்கள் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.

காஸாவில் 2,50,000 க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இருப்பினும், இவர்களில் பெரும்பாலோர் பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நா. முகமையால் நடத்தப்படும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்று தி டைம்ஸ் ஒஃப் இஸ்ரேல் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (04)



# நைஜரிலிருந்து பிரான்ஸ் ராணுவம் வெளியேறும் நடவடிக்கை ஆரம்பம்

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில், அந்த நாட்டு ராணுவத்துடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த பிரான்ஸ் படையினர், அங்கிருந்து நேற்று புதன்கிழமை முதல் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அங்கு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் மொகமட் பாசுமின் அரசைக் கலைத்துவிட்டு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரான்ஸ் ராணுவ செய்தித் தொடர்பாளர், நைஜரில் பணியாற்றி வந்த பிரான்ஸ் படையினரில் 100க்கும் மேற்பட்டோர் தலைநகர் நியாமேவிலிருந்து 2 விமானங்களில் பிரான்ஸுக்கு புதன்கிழமை புறப்பட்டனர். இந்த ஆண்டு இறுதிக்குள் அங்குள்ள அனைத்து பிரான்ஸ் ராணுவத்தினரும் பல கட்டங்களாகத் தாயகம் திரும்புவார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸ் கொலனி ஆதிக்கத்திலிருந்து நைஜர் கடந்த 1960 ஆம் ஆண்டு விடுதலை பெற்றதிலிருந்து அங்கு ராணுவ ஆட்சியும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் ஆட்சியும் மாறி மாறி நடைபெற்று வந்தன. இந்த நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் மொகமட் பாசும் வெற்றி பெற்று நாட்டின் பத்தாவது அதிபராக 2021 இல் பதவியேற்றார். நைஜரில் அமைதியான முறையில் நடைபெற்ற முதல் ஆட்சி மாற்றம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மொகமட் பாசுமின் ஆட்சியை ராணுவம் கடந்த ஜூலை 26 ஆம் திகதி கவிழ்த்தது. இதற்கு, ஐ.நா., ஐரோப்பிய யூனியன், ஆபிரிக்க யூனியன் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

ராணுவக் கிளர்ச்சிக்குப் பிறகு நைஜரில் பிரான்சுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்தன. அதையடுத்து, நைஜரிலிருந்து தங்களது தூதரையும், ராணுவத்தினரையும் திரும்ப அழைக்கப்போவதாக பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன் அண்மையில் அறிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, அங்கிருந்து பிரான்ஸ் படையினர் வெளியேறும் நடவடிக்கை தற்போது தொடங்கியுள்ளது.


சுமார் 1,500 பிரான்ஸ் வீரர்கள் நைஜரில் தங்கியிருந்து, அந்த நாட்டுப் படையினருடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். நைஜர் ராணுவத்துக்கு அவர்கள் பயிற்சியும் அளித்து வந்தனர். இந்த நிலையில் அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதால் ஏற்படும் வெற்றிடத்தை பயங்கரவாதிகள் பயன்படுத்திக் கொள்வார்கள், என்று அஞ்சப்படுகிறது. (04)

# நெதன்யாகுவையும் சுட்டு வீழ்த்துவார்கள்! துருக்கி அமைச்சரின் டுவிட்டால் சர்ச்சை

"நீங்களும் ஒரு நாள் கொல்லப்படுவீர்கள்!" என்று துருக்கி கல்வித்துறைத் துணை அமைச்சர் நசீஃப் இல்மாஸ், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவைக் குறிப்பிட்டு சர்ச்சைக்குரிய கருத்தைப் பதிவிட்டுள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலை நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, போர்ப் பிரகடனம் செய்த இஸ்ரேல், ஹமாஸ் படையினரைக் குறிவைத்துத் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் இருதரப்பிலும் ஏராளமானோர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், காசா மீது இஸ்ரேல் விமானப் படை நடத்தும் தாக்குதல் வீடியோவை, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

இந்த விடியோவைத் தானும் பகிர்ந்துள்ள துருக்கியின் கல்வித்துறைத் துணை அமைச்சர் நசீப் இல்மாஸ், ஒருநாள் நெதன்யாகுவையும் சுட்டு வீழ்த்துவார்கள். நீங்களும் கொல்லப்படுவீர்கள்!, என்று சர்ச்சைக்குரிய கருத்தைப் பதிவிட்டுள்ளார். அவரது பதிவு இப்போது பல்வேறு கருத்தாடல்களை உருவாக்கியுள்ளது. (04)

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது பாலஸ்தீனம்



இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரை நிறுத்த சர்வதேச நாடுகளுக்கு பாலஸ்தீன அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக பாலஸ்தீனத்தில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியிருக்கும் நிலையில், அந்நாட்டு அரசு, போரை நிறுத்த வேண்டுகோள் முன்வைத்துள்ளது.

தீவிரப் போர் நடந்து வரும் காசா நகரில் அத்தியாவசிய பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், பாலஸ்தீன மக்களுக்கு உரிய பாதுகாப்புக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், சர்வதேச நாடுகள் தலையிட்டுப் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த நாடு அழைப்பு விடுத்துள்ளது. (04)

# 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்தில் சோனியா - பிரியங்கா ஒரே மேடையில்



தி.மு.க. வின் மகளிர் உரிமை மாநாட்டில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியாவும், பொதுச்செயலர் பிரியங்காவும் ஒன்றாகப் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த, 1998ல் காங்கிரஸ் தலைவராக சோனியா பொறுப்பேற்றதும் அப்போதைய தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தலைமையில், சோனியா, பிரியங்கா இருவரும் ஒன்றாகப் பங்கேற்ற மாநாடு, தமிழகத்தில் நடந்தது. அப்போது பிரியங்கா நேரடி அரசியலில் ஈடுபடவில்லை என்றாலும் கூட, கட்சி நிகழ்ச்சியான அம்மாநாட்டில் பங்கேற்றார்.

அதன்பின், 2018 ஆம் ஆண்டில் காங்கிரஸ் பொதுச்செயலராக பிரியங்கா பொறுப்பேற்று, கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். இந்நிலையில், சென்னையில் வரும் 14 இல் நடக்கவுள்ள தி.மு.க., மகளிர் உரிமை மாநாட்டில், சோனியா, பிரியங்கா இருவரும் ஒரே மேடையில் பங்கேற்கின்றனர்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில், தி.மு.க., துணைப் பொதுச்செயலர் கனிமொழி முன்னிலையில் நடக்கும் மாநாட்டில், சோனியா சிறப்புரை ஆற்றுகிறார். பிரியங்கா, சுப்ரியா சுலே, சுபாஷினி அலி, ஆனி ராஜா, சுஷ்மிதா தேவ் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் சோனியா, பிரியங்கா பங்கேற்ற மாநாடு, ஸ்ரீபெரும்புதூர் அருகே நடந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பின், தற்போதைய மாநாட்டில்தான் சோனியாவும் பிரியங்காவும் தமிழகத்தில் ஒரே மேடையில் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

## அட்டாளைச்சேனைக் கல்விக் கல்லூரிக்கு ஆசிரியர் பயிலுநர்களை உள்ளீர்க்கும் நிகழ்வு






(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனைக் கல்விக் கல்லூரிக்கு 2019 ஃ 2020 உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஆசிரியர் பயிலுநர் பயிற்சிக்கு உள்ளீர்க்கும் நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தலைமையில் இன்றும் நாளையும் இடம் பெறுகிறது.

இந்த ஆசிரியர் பயிலுனர் 384 பேரில் இன்று 192 மாணவர்களும் நாளைய அமர்வில் 192 மாணவர்களுமாக இரு அமர்வுகளாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிகழ்வின்போது அதன் பீடாதிபதி உரை நிகழ்த்தும்போது, "மாணவர்களுக்கான சட்ட திட்டங்கள் பற்றியும் எதிர்காலத்தில் இங்கு பயிலுகின்ற ஆசிரிய மாணவர்கள் இந்தச் சமூகத்திற்கு தங்களாலான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, ஆசிரியர் தொழிலானது மிகப் புனிதமானது. அந்த வகையில் உங்களையும் நான் எதிர்பார்க்கின்றேன்.

இங்கு இரண்டு வருடங்கள் உள்ளகப் பயிற்சிக்காகவும் ஒரு வருடம் அண்மித்த பாடசாலைகளில் செயற்திறன் பயிற்சிக்காகவும் மொத்தமாக மூன்று வருடங்கள் எங்களுடைய கல்லூரியின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக நீங்கள் உள்வாங்கப்பட்டுள்ளீர்கள். வெளியில் ஆயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்கள் இணைவதற்கு ஆவலாக இருக்கத்தக்கதாக நீங்கள் இணைந்திருப்பது அதிர்ஷ்டசாலிகளாக நான் கருதுகின்றேன்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உப பீடாதிபதி எம்.சி.ஜ/னைதீன், பதிவாளர் எம்.ஜிப்ரீ, நிர்வாக இணைப்பாளர் எம்.எச் எம்.மின்வர் மற்றும் ஏனைய பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




## ஹோலி குறோஸ் பாடசாலைக்கு யுனிசெப் பிரதிநிதிகள் வருகை

(வி.ரி.சகாதேவராஜா)

யுனிசெப் அவுஸ்திரேலியா அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் சம்மாந்துறை வலயத்தின் சொறிக்கல்முனை ஹோலி குறோஸ் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தது.

அபிவிருத்திக்கான விளையாட்டு (எஸ் 4 டி) என்ற நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக வருகைதந்த இந்தக் குழுவினர், விவியன் ஹாவே வொங்க் தலைமையில், பாடசாலைப் பார்வையிடலையும் கலந்துரையாடலையும் மேற்கொண்டார்கள்.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலைமையில், யுனிசெப் குழுவினருக்கு பாரம்பரிய இசை மற்றும் பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் விவியன் ஹாவே வொங்க் தலைமையிலான குறித்த குழுவில், கிழக்கு மாகாண யுனிசெப் பொறுப்பாளர் நிபால் அலாவுதீன், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களப் பிரதிநிதி எஸ்..சஹீத், இவ் வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான சம்மாந்துறை வலய உடற்கல்விப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள் .

அங்கு அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களுடன் யுனிசெப் பிரதிநிதிகள் வேலைத்திட்டம் தொடர்பாக நேரடியாகக் கலந்துரையாடினர். மாணவர்களின் செயன்முறை விளக்கப் பயிற்சியையும் அவர்கள் பார்வையிட்டார்கள்.

## கல்முனை மாநகரசபையில் மீலாதுன் நபி விழா இன்று



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த மீலாதுன் நபி விழா இன்று வியாழக்கிழமை மாநகர சபை முன்றலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி ஷபானிஸ் முஹம்மத் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இதில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுச் சந்தை வர்த்தகர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, மாநகர ஆணையாளர் மற்றும் மௌலவி ஷபா முஹம்மத் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் மீலாத் கந்தூரி அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது.

விழா நிகழ்வுகளை மாநகர சபையின் வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் நெறிப்படுத்தியிருந்தார்.

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 127,850,473 ரூபா நட்ட ஈடு கிடைத்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2023, 2024 பெரும்போகத்தில் வறட்சி, வெள்ளம், காட்டுயானை போன்ற தாக்கங்களுக்கு உள்ளான விவசாயிகளுக்கு ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து எண்பத்தையாயிரத்து நானூற்றி எழுபத்தி மூன்று ரூபா நட்டஈடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி கமநல காப்புறுதிச்சபையின் உதவிப்பணிப்பாளர் (பதில்) பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

இன்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை அவர் வெளியிட்டார்.

2023, 2024 காலப்பகுதியில் 71,947 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1,215 ஏக்கர் நிலப்பரப்புக்கு 584 விவசாயிகளுக்கு வெள்ளம், வறட்சி, காட்டு யானைகளின் தாக்கத்திற்காக 127,850,473 ரூபா நட்ட ஈடாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை விவசாய அமைச்சர் கிளிநொச்சி வருகின்றபோது சம்பிரதாயபூர்வமாக இந்த நட்ட ஈட்டுத் தொகை விவசாயிகளுக்கு வழங்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. அதனைத்தொடர்ந்து, அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பில் இடப்படும், எனவும் அவர் தெரிவித்தார்.

கமநல காப்புறுதி சபையின் இவ்வாறான நன்மைகளை விவசாயிகள் அடைவதற்கு அனைத்து விவசாயிகளும் தங்களின் பயிர்களுக்கு காப்புறுதி செய்யவேண்டும். அத்துடன், அவர்கள் தமது கால்நடைகளுக்கான காப்புறுதிகளையும் மேற்கொள்ள முடியும்.

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் காப்புறுதியை பெருமளவு விவசாயிகள் பயன்படுத்துவதில்லை. இவை விவசாயிகளின் ஓய்வுக் காலத்தில் பயன்தரும். எனவே, விவசாய ஓய்வூதியக் காப்புறுதியையும் விவசாயிகள் மேற்கொள்ளவேண்டும், எனவும் அவர் குறிப்பிட்டார். (02)



## மதுபானத்தை லஞ்சமாகப் பெற்ற சுகாதார பரிசோதகர் கைதானார்!

மிஹிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு உணவு விநியோகம் செய்து வந்த நபரிடம் லஞ்சமாக மதுப் போத்தல் மற்றும் குளிர்பானப் போத்தல்களை பெற்றுக் கொண்ட ரஜரட்ட பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரை ரஜரட்ட பல்கலைக் கழக ஊழியர்கள் மடக்கிப் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் கடமையாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகரான, கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைக்கு சிறியரக லொறியொன்றில் உணவு வகைகளை விநியோகம் செய்து வந்த நபர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில், பல்கலைக்கழக ஊழியர்களும் பாதுகாப்பு பிரிவின் காவலர்கள் சிலரும் மிஹிந்தலை விவசாய சேவை நிலையத்திற்கு முன்பாக மறைவாக காத்திருந்து, குறித்த சுகாதார பரிசோதகர் மதுபானம் மற்றும் குளிர்பானப் போத்தல்களை லஞ்சமாக பெறும் சந்தர்ப்பம் பார்த்து அவரை மடக்கிப்பிடித்து தம்மிடம் ஒப்படைத்தனர் என மிஹிந்தலை பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அடிக்கடி லஞ்சம் கேட்டுத் தொந்தரவு செய்து வந்ததாகவும், இதனை பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவித்து, சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை குறித்த விநியோகத்தர் மேற்கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டடனர். (ரெ-01)

## படம் சொல்லும் சேதி!



திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் உள்ள வீட்டிற்கு முன்னால், வீதி ஓரமாகத் தரித்துவிடப்பட்டுள்ள இரு வாகனங்கள்.

வீட்டு உரிமையாளர் தமது மிதிவண்டியை வீதிக்கு எடுத்துச் செல்ல வழி தேடுகின்றார்.

**சிந்திப்போம் - செயல்படுவோம்!**

## தரம் குறைந்த தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு இரத்தம் தொடர்பான நோய்கள் பரவும் அபாயம்!

### விசேட மருத்துவர் சமல் சஞ்சீவ எச்சரிக்கை

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தரக்குறைவான இமியுனோகுளோபின் எனப்படும் நோய் எதிர்ப்புத் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு எயிட்ஸ், கல்லீரல் அழற்சி அல்லது இரத்தம் தொடர்பான நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் சங்கம் எச்சரித்துள்ளது.

எனவே, இமியுனோகுளோபின் வைரஸ் தடுப்பூசி போடப்பட்ட மக்களுக்குத் தொற்று நோய்களுக்கான இரத்தப் பரிசோதனையை உடனடியாக மேற்கொள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும் இந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சுகாதாரத்துறைக்கு மருத்துவ விநியோகப் பிரிவு மூலம் இறக்குமதி செய்யப்படும் சில மருந்துகளின் தரம் சோதித்தித்துப் பார்க்கப்படாததால், அந்த மருந்துகளைப் பெறும் மக்களுக்கு எயிட்ஸ், கல்லீரல் அழற்சி உள்ளிட்ட பல தொற்று நோய்கள் பரவும் அபாயம் அதிகளவில் இருப்பதாகவும் மருத்துவர் சங்கங்களின் கூட்டமைப்பு கூறுகின்றது.

இந்த இமியுனோகுளோபின் தடுப்பூசி, போலி அனுமதிக் கடிதம் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளமையினாலும், அது எவ்வாறான வழியில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது என்பது தெளிவாக இல்லாததாலும், ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாய் நிறுவனம், இத்தகைய மருந்தை உற்பத்தி செய்வதில்லை என உறுதிப்படுத்தியுள்ளமையின் காரணமாகவும் இந்த மருந்து போலியானது மற்றும் கேள்விக்குரியது என்பது தெளிவாகின்றது. எனவே, இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என மருத்துவ நிபுணர் ஜீ.ஜீ. சமல் சஞ்சீவ கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-02)

## சினேக பூர்வ துடுப்பாட்ட போட்டியில் மன்னார் மாவட்டச் செயலகம் வெற்றி



வட மாகாண மாவட்டச் செயலகங்களுக்கிடையிலான பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான சினேக பூர்வ மென்பந்துத் துடுப்பாட்ட போட்டித் தொடர், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில், கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் இடம்பெற்றது. முதற்போட்டியில் யாழ் மாவட்ட செயலகத்தை வீழ்த்தி, மன்னார் மாவட்டச் செயலக அணி வெற்றி பெற்றுக் கொண்டது.

அடுத்த போட்டியில், வவுனியா மாவட்ட செயலக அணியை கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றது.

மூன்றாவதாக, மன்னார் மாவட்டச் செயலக அணியும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியும் மோதிக் கொண்ட போட்டியில், மன்னார் மாவட்டச் செயலக அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மன்னார் மாவட்ட, கிளிநொச்சி மாவட்டச் செயலக அணிகள் மோதிக்கொண்ட இறுதிப் போட்டியில்,

மன்னார் மாவட்டச் செயலக அணி வெற்றிபெற்று நடப்பாண்டுக்கான வட மாகாணத்தின் மாவட்ட செயலகங்களுக்கிடையிலான பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான சினேக பூர்வ மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் சம்பியனானது.

அடுத்தாண்டுக்கான குறித்த போட்டித் தொடர் யாழ் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# சுவிட்ஸர்லாந்து தம்பதிகளின் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு ஜோடி பாதணிகள் மாயமாகின!

## அனுராதபுரம் ஹோட்டலில் நேர்ந்த பரிதாபம்

இலங்கைக்கு உல்லாப்ச பிரயாணிகளாக வந்து அநுராதபுரத்தில் சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த தம்பதியரின் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பாதணிகள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் சுற்றுலாத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரதிலுள்ள வணக்க ஸ்தலங்களை கொண்ட நகரப் பகுதிக்குச் சென்று விட்டு ஓய்வெடுப்பதற்காக இருவரும் தாம் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றபோதே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வெளிநாட்டுத் தம்பதியர் இருவரும் வணக்க ஸ்தலத்திற்கு செல்லும்போது சாதாரண பாதணிகளையே அணிந்து சென்றுள்ளனர் எனவும், காணாமல்போன விலையுயர்ந்த பாதணிகளை அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் வரவேற்பாளர் பகுதிக்கு எதிரே விட்டுச் சென்றதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து வெளியேறுவதற்காக வந்தபோது கழற்றிய இடத்தில் அந்தப் பாதணிகள் இல்லாததை அறிந்ததையடுத்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன பாதணி ஜோடி சுமார் 88,250 ரூபாய் இலங்கை நாணயப் பெறுமதி மிக்கது என முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரெ-03)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2023இல் வெளியிடப்பெற்றது.